

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

-சமூக சீர்திருத்த மாத இதழ்-

THIRU QURAN NARCHEYDHI MALAR - 2018 MARCH

மலர்: 11 இதழ்: 6 மார்ச் 2018 விலை: ரூ. 5



- மக்கள்தொகைப் பெருக்கமும் பாடங்களும்



- ரயிலில் ஏற விடாத சகபயணிகள்!



- பெண்குழந்தை என்ற அருட்கொடை

- குழந்தைச் செல்வங்களின் இழப்பை ஈடு செய்வது யார் ?

# திருக்குர்ஆன் வந்திருக்காவிட்டால்...?



● 'நாங்கள் இன்று உயிர் வாழ்வதே அந்த இறைவேதத்தின் வரவைக் கொண்டுதான்! அது மட்டும் வந்திருக்காவிட்டால் இவ்வுலகையே நாங்கள் கண்டிருக்க மாட்டோம். இன்று நாம் உங்களோடு பேசிக்கொண்டிருக்க மாட்டோம்... எங்களைக் கருவிலேயே கத்திகள் பதம் பார்த்திருக்கும்! ... தப்பித் தவறிப் பிறந்திருந்தால் கள்ளிப்பாலும் விஷ ஊசிகளும் விளையாடியிருக்கும்!' என்று தாம் இன்று உயிர் வாழும் அற்புதம் பற்றி பெண்ணினம் பேசும்.

● 'எங்களுக்கும் ஆன்மா உண்டா என்ற சர்ச்சை தொடர்ந்திருக்கும்... எங்களுக்கும் ஆண்களிடம் உரிமைகள் உண்டு என்பதை அறியாமலே பெட்டிப்பாம்பாக வாழ்ந்துகொண்டு இருப்போம். மகளாக, மனைவியாக, தாயாக, குடும்ப உறவுகளோடு உரிய உரிமைகளோடு உணர்வுகளோடு வாழ வழிவகுத்தது அந்த நிகழ்வு. ஆணுக்குப் பெண் சமமே என்ற அந்த சிந்தனைப் புரட்சியை அறிமுகப் படுத்தியது அது. இன்றும் கூட தொடர்ந்து மறுக்கப்பட்டு வரும் பெண்ணுரிமைகளை அன்றே மீட்டுத் தந்தது இஸ்லாம். தலைமுறை தலைமுறைகளாக வரதட்சணை, வைப்பாட்டிகள், கற்பழிப்புக் கொடுமைகளில் இருந்து எம் இனத்தைக் காப்பாற்றிவருகிறது. இன்று நாங்கள் அனுபவிக்கும் சொத்துரிமை, கல்வி பெறும் உரிமை, பேச்சுரிமை, விரும்பியவரை மணந்துகொள்ளும் உரிமை, மணக்கொடை பெறும் உரிமை ஆகியவற்றுக்கு அடித்தளம் இட்டது இஸ்லாம்!' என்பார்கள் உலகெங்கும் வாழும் இஸ்லாமிய மங்கையர் கூட்டம்.





● 'இன்றைய நவீன உலகில் எங்கள் உடல்களைக் கடைச்சரக்காக்கி விற்றுப்பிழைக்கும் கயவர்களிடம் இருந்தும் கற்பழித்துத் தூக்கி எறியும் காமுகர்களின் வஞ்சக வலையில் இருந்தும் தந்தைகள் இல்லா அனாதைக் குழந்தைகளை நாங்கள் கர்ப்பத்தில் சுமக்கும் இழிவில் இருந்தும் நாங்கள் விடுபட்டு கண்ணியமாக பாதுகாப்பாக வாழ்கிறோம் என்றால் அதற்கு வித்திட்டது அந்த இறைவனின் வேதமே.' என்பார்கள் இஸ்லாமிய பெண்ணினத்தின் பிரதிநிதிகள்.

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

# THIRU QURAN NARCHEYDHI MALAR

மலர்: 11 இதழ்: 6 மார்ச் 2018 விலை: ரூ. 5

## பொருளடக்கம்

மக்கள்தொகைப் பெருக்கமும் பாடங்களும் -2
வாசகர் எண்ணம் -3
ரயிலில் ஏற விடாத சகபயணிகள்!- 5
குழந்தைச் செல்வங்களின் இழப்பை ஈடு செய்வது யார்? -8
பெண்குழந்தை என்ற அருட்கொடை -10
இறைபொருத்தம் நாடி தர்மம் செய்யுங்கள்! -13
இந்தியாவில் முஸ்லிம்களின் மக்கள்தொகை அதிகரிக்கிறதா? -14
எதிரலைகளுக்கு எதிராக எழுச்சி பெறும் மக்கள் இயக்கம் -16
இஸ்லாமிய வளர்ச்சி பற்றிய ஆய்வுகளும் அதிர்வலைகளும் -18
திருக்குர்ஆன் பற்றிய நபிமொழிகள்- 20
இஸ்லாமிய வளர்ச்சி மகிழ்ச்சிக்குரிய விஷயமா? -21
ஐரோப்பிய நாடுகளில் இஸ்லாமிய வளர்ச்சி -23
போலீஸ் சீருடையின் அங்கமாகும் ஹிஜாப்! -24

**வாசகர்கள் கவனத்திற்கு...**

- இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை **9886001357** என்ற எண்ணுக்கு **SMS** அனுப்பவேண்டும்.
- மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் **SMS** மூலம் **RESEND QNM** என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.
- முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்ப வேண்டும்.
- இதழ் மொத்தமாக வேண்டுவோர், சந்தாதாரர்கள் குறைபாடுகள் தொடர்பு எண்: **08867971835**

Published from:

**House of Peace,**

PO Box no. 1726, No.501, 3rd cross, Syed Block,
AS palya Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

# மக்கள்தொகைப் பெருக்கமும் பாடங்களும்

https://www.7billionandme.org/ *என்ற இணைய தளம்*; (As of 19-12-2017 there are almost 7.3 Billion people on Earth . Did you know that in 1960 the population on Earth was just over 3 billion?) **19-12-2017 தேதியில் பூமியின் மக்கள்தொகை சுமார் 7.3 பில்லியன். 1960 ஆம் ஆண்டு பூமியின் மீது 3 பில்லியன் மக்களே இருந்தார்கள் என்ற உண்மை உங்களுக்குத் தெரியுமா? என்று கூறுகிறது.**

மக்கள் தொகை அதிகரிப்பு பற்றி பல கண்ணோட்டங்களையும் எதிரொலிகளையும் நாம் மக்களிடையே காண முடிகிறது..



• நாமே அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறோம், இதில் இவர்கள் வேறா? நமது வறுமை இன்னும் கூடுமே என்ற கவலை சிலருக்கு.

• வறுமைக்குக் காரணம் மக்கள் தொகை அல்ல, மாறாக அநியாயமான பொருள் பங்கீடுதான் என எதிர் வாதம் செய்வார்கள் சிலர்.

• மக்கள் தொகை அதிகரித்தால் மனித வளம் அதிகரிக்கும். நாடு இன்னும் முன்னேற வாய்ப்பு என்று கூறுவார் சிலர்.

• இத்தனை கோடி மக்களில் எனது இடம் எத்தனையாவது? என்று ஆவல் கொள்வோர் ஒருபுறம்.

• உலகம் எக்கேடோ கேட்டுப் போகட்டும்! எனக்கு பாதிப்பு வராமல் இருந்தால் சரி என்று ஒதுங்குவோர் ஒருபுறம்.

இவ்வாறு பல எதிரோலிகளுக்கிடையே நாம் அனைவரும் மறந்துபோகும் ஒரு விடயம் உண்டு. அதைத்தான் நாம் முக்கியமாக கவனிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

இன்று பூமியின் மீது வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் நாம் உட்பட 730 கோடி. அதாவது ஒரு ஆண்-பெண் ஜோடியிலிருந்து உருவாகிப் பல்கிப் பெருகி பூமி உருண்டையின் மீது பரவி வாழ்ந்துகொண்டு இருந்தவர்களில் எஞ்சியவர்களின் எண்ணிக்கைதான் 730 கோடி என்பது! சில கணக்கெடுப்புகளின் படி மனிதகுலம் பூமியின்மீது தோன்றிய காலம் கிமு. 8000 எனக் கொண்டால் இதுவரை 10800 கோடி மக்கள் இந்த பூமிப்பந்தின் மீது வந்திருக்கிறார்கள். (தகவல்: Population Reference Bureau, UN - www.livescience.com) (கருக்கொலைகளைக் கணக்கிட்டால் எண்ணிக்கை இன்னும் பூதாகரமாக மாறும் என்பது தெரிந்ததே!)

- இவர்கள் இங்கு வந்திருப்பதன் நோக்கம் என்ன?
- இங்கு வந்து அவதிப் படுவதற்காகவா?
- நமது வறுமையைக் கூட்டுவதற்காகவா தொடர்ந்து இங்கு

வருகிறார்கள்?

- அல்லது நமது செல்வ செழிப்பை அதிகரிப்பதற்காகவா?
- அல்லது இங்கு இந்த அற்பகால சுகத்தையும் துன்பங்களையும் அனுபவித்துவிட்டு அனைத்தையும் துறந்துவிட்டு செல்வதற்காகவா?
- இங்கு வந்து உழைத்தும் உழைக்காமலும் தனக்குப் பிறகு வரக்கூடிய பல தலைமுறைகளுக்கு வேண்டிய சொத்துக்களை சேர்த்துவிட்டுப் போவதற்காகவா?

இக்கேள்விகளுக்கான தெளிவான பதில்களை நாம் எங்கிருந்து பெற முடியும்? இறைவனை மறுக்கும் நாத்திகர்களிடம் இதற்கு பதில் கிடையாது என்பது தெளிவு. வேண்டுமானால் நீங்கள் கேட்டுப்பாருங்கள். அவ்வாறிருக்கும் போது ஆத்திகம் இதற்கு என்ன பதில்களை முன்வைக்கின்றதோ அவற்றை பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்து அதன்படி நடப்பதுதானே அறிவுடைமை? காரணம் நாம் இங்கு வந்தபின் ஏன் வந்தோம் எதற்காக வந்தோம் இனி எங்கே போகிறோம் என்பதை அறிவதுதானே நமது வாழ்க்கைப் பயணத்தை அர்த்தமுள்ளதாக ஆக்கும்?

## எல்லாம் யார் செயல்?

இந்த மனிதர்கள் யாரும் இவர்களாக இங்கு வருவதில்லை என்பதும் இவ்வுலகைப் படைத்து பரிபாலித்து வரும் எல்லையற்ற ஆற்றலும் அறிவும் கொண்ட ஒரு சக்திக்கு உட்பட்டுதான் இவை நிகழ்கின்றன என்பதும் பகுத்தறிவு நமக்கு எடுத்துச் சொல்லும் பாடங்களாகும். அந்த மறைவான சக்தியையே நாம் தமிழில் கடவுள் அல்லது இறைவன் என்றும் ஆங்கிலத்தில் காட் என்றும் அரபு மொழியில் அல்லாஹ் என்றும் அழைக்கிறோம். மனிதன் தோன்றிய காலந்தொட்டு அந்த இறைவன் தனது தூதர்களையும் அவர்கள் மூலமாக வேதங்களையும் செய்திகளையும் மனிதகுலத்திற்கு அவ்வப்போது அனுப்பி வந்துள்ளான். அந்த வகையில் இவ்வுலகுக்கு இறுதியாக அனுப்பப்பட்ட இறைத் தூதரே முஹம்மது நபி (ஸல்) அவர்கள். அவர்கள் மூலமாக அருளப்பட்ட வேதமே திருக்குர்ஆன். நமது வாழ்க்கையின் நோக்கம் பற்றி பினவருமாறு இறைவன் கூறுகிறான்:

- **உங்களில் அழகிய செயலுக்குரியவர் யார் என்பதைச் சோதிப்பதற்காக மரணத்தையும்,வாழ்வையும் அவன் படைத்தான். அவன் மிகைத்தவன் மன்னிப்பவன். (திருக்குர்ஆன் 67:2)**
- **அவர்களில் அழகிய செயலுடையவர் யார் என்பதைச் சோதிப்பதற்காகப் பூமியில் உள்ளதை அதற்கு (பூமிக்கு) அலங்காரமாக நாம் ஆக்கினோம். (திருக்குர்ஆன் 18:7.)**

அதாவது பூமி என்ற பரீட்சைக் கூடத்தில் நாம் விடப்பட்டு நம் வினைகள் கண்காணிக்கப் படுகின்றன என்பதைத்தான் மேற்படி வசனங்களில் அவன் கூறுகிறான். அதாவது இவ்வாழ்க்கை என்ற பரீட்சையை இப்போது எழுதிக்கொண்டு இருப்பவர்களின் எண்ணிக்கைதான் 730கோடி இதற்கு முன்னர் 10800 கோடி மக்கள் இதை எழுதி முடித்துச் சென்று விட்டார்கள். இன்னும் அன்றாடம் சென்றுகொண்டும் இருக்கிறார்கள். அவர்களாகச் செல்வதில்லை, ஆனால் பலவந்தமாக இப்பரீட்சைக் கூடத்திலிருந்து துரத்தியடிக்கப்படுகிறார்கள். தனித்தனியாகவும் கூட்டம்கூட்டமாகவும் துடைத்தெறியப் படுகிறார்கள்.

- *இவர்களில் எத்தனை பேர் வெற்றி பெற்றார்கள்?*
- *எத்தனை பேர் தோல்வி கண்டார்கள்?*
- *அவர்களின் நிலை என்ன?*
- *அவர்களைத் தொடர்ந்து நாளை நாம் இங்கிருந்து தூக்கி வீசப் படுவோம் அல்லவா? நமது நிலை என்னவாக இருக்கும்?*
- *நாம் செல்லுமிடம் பாதுகாப்பானதாக அமைய வேண்டுமானால் இன்று நாம் என்ன செய்ய வேண்டும்?*

**பயனுள்ள ஆராய்ச்சி**

இந்த வகையிலான சிந்தனை அல்லது ஆராய்ச்சி மற்றெல்லாவற்றையும் விட நமக்கு பயனுள்ளதாக இருக்கும். இதோ நம்மைப் படைத்தவன் பல்வேறு காலகட்டங்களில் இந்த பூமியின் மீது நடந்ததை நமக்கு நினைவூட்டுகிறான் பாருங்கள்:

- **இவர்களுக்கு முன்னர் நாம் எத்தனையோ தலைமுறையினரை அழித்திருப்பதும், அவர்கள் வசித்திருந்த இடங்களில் இவர்கள் நடந்து திரிவதும், இவர்களுக்கு நேர்வழியைக் காட்ட வில்லையா? நிச்சயமாக இதில் (தக்க) அத்தாட்சிகள் இருக்கின்றன. (இதற்கு) இவர்கள் செவிசாய்க்க மாட்டார்களா? (திருக்குர்ஆன் 32:26)**
- **அவர்களுக்கு முன்னர், எத்தனையோ தலைமுறையினரை நாம் அழித்திருக்கிறோம் அவர்களில் ஒருவரையேனும் நீர் பார்க்கிறீரா? அல்லது அவர்களுடைய இலேசான சப்தத்தை நீர் கேட்கிறீரா? (திருக்குர்ஆன் 19:98)**

இப்போது நமது தவணை ... இதில் இறைவனின் வழிகாட்டுதலுக்கு ஏற்ப வாழ்பவர்கள் வெற்றி அடைகிறார்கள்.. சொர்க்கம் செல்கிறார்கள். இறைவனின் வழிகாட்டுதலை ஏற்க மறுத்து தான்தோன்றித்தனமாக வாழ்க்கையைக் கழிப்பவர்கள் நரகம் செல்கிறார்கள்.

- **நீங்கள் எவ்வாறு நடந்து கொள்கிறீர்கள் என்று நாம் கவனிப்பதற்காக அவர்களுக்குப் பின்னால் பூமியிலே உங்களை நாம் பின்தோன்றல்களாக ஆக்கினோம். (திருக்குர்ஆன் 10:14)**

# வாசகர் எண்ணம்

- இதழ்கள் அருமையாக உள்ளன. அருமையான சேவை. அல்லாஹ் அருள் செய்வானாக

**- அப்துல் காதர், திருநெல்வேலி**

- ஜனவரி 18 இதழ் பற்றி ... ஆவணக் காப்பகத்தின் அபாய அறிக்கை அதிரவைத்தது. குற்றங்களின் கூட்டுத்தொகை அதிகரித்துக்கொண்டே போவதைத் தடுக்க விழிப்புணர்வு பிரச்சாரத்தை மேலும் வேகமுடன் முன்னெடுக்க வேண்டும். வரதட்சணை பற்றிய மூன்று படைப்புகளும் அழுத்தமான பார்வையையும் விளக்கமான தீர்வையும் கொண்டதாக அமைந்திருந்தன. சிதறும் உலகைச் சீர்திருத்த இணையக் கூறிய படைப்பு அழுத்தமான பல சுட்டிக் காட்டல்களை கொண்டதாக இதழ் முழுவதும் இடம் பெற்ற விழிப்புணர்வு பார்வை வரவேற்கத்தக்கது.

வாழ்க வளமுடன்

**- தஞ்சை என்.ஜே. கந்தமாறன், சென்னை**

# ரயிலில் ஏற விடாத சகபயணிகள்!

சொந்தத் திருமணத்திற்காக இரண்டு மாத லீவில் ஊருக்கு வந்த ராஜா இன்று மீண்டும் வேலையில் சேர புதுடில்லிக்குப் புறப்படுகிறான். வழியனுப்ப வந்த குடும்பத்தினரோடு ரயில்நிலையம் வந்து சேர்ந்தாயிற்று. 20 நாட்களுக்கு முன்னரே முன்பதிவும் செய்திருந்தான். S6 இல் 32 வது பர்த். தமிழ்நாட்டில் ஒரு சிறிய ஊர் அது. ரயில் வந்து சேரும் நேரம் இரவு 11.30 ... இரண்டு நிமிடத்திற்கு மேல் ரயில் அந்த ஸ்டேஷனில் நிற்காது. அதற்குள் ஏறியாக வேண்டும். எல்லா தயாரிப்புகளோடும் காத்திருந்தான் ராஜா.

மணமான பின்னர் முதல்முறையாக இளம் மனைவியைப் பிரியும் தருணம் அது. மனைவிக்கும் அவள் குடும்பத்தார்க்கும் சோகம்.. ராஜாவுக்கும் சோகம்தான். ஆனால் அவனது டென்ஷன் முழுவதும் இரண்டு நிமிடத்தில் இரயிலுக்குள் ஏறுவதைப் பற்றியே இருந்தது. ரயிலின் வருகைக்கான அறிவிப்பு மணியும் அடித்தாயிற்று. ஸ்டேஷனில் விசாரித்து S6 பெட்டி நிற்கும் குத்துமதிப்பான இடத்தையும் அறிந்து கொண்டான். வழக்கமான கூவுதலோடு ரயில் ஸ்டேஷனை வந்தடைந்து கொண்டிருக்கிறது. S1.. S2... S3….. என ஒவ்வொரு பெட்டியாக ராஜாவைக் கடந்து சென்றன. தான் ஏறவேண்டிய பெட்டியும் கடந்து போய் S9 கோச் அவன் நின்ற இடத்தில் வந்து நின்றது. அவசர அவசரமாக பயணச்சுமைகளைத் தூக்கிக்கொண்டு S6 கோச்சை நோக்கி ஓடினான். ஒருவழியாக கோச்சை அடைந்து ஏறப்பார்த்தால் அங்கே இரண்டு கதவுகளும் தாழிடப்பட்டிருந்தன. S7 இலும் அதே கதை.

ஓடிவந்து S6 இல் ஜன்னல் வழியாக மற்ற பயணிகளை அழைக்கலாம் என்று பார்த்தால் எல்லா ஜன்னல்களும் மூடப்பட்டு உள்ளன. கதவருகே உள்ள ஜன்னலைத் தட்டிப்பார்த்தான்.. யாரும் திறக்கவில்லை. உறங்கத் தொடங்கியிருப்பார்கள் போலும். ராஜாவின் டென்ஷன் யாருக்குத் தெரியும்?

கோச்சின் நடுவே ஒரு ஜன்னல் மட்டும் திறந்திருந்தது. ஓடினான் ராஜா.. உள்ளே கல்லூரி இளைஞர்களின் கும்பல்... குடியும் கும்மாளமுமாக ஆரவாரம் செய்து கொண்டு இருந்தார்கள்.

“சார் சார், எனக்கு இந்த கோச்தான்.. கொஞ்சம் சீக்கிரமா கதவைத் திறங்க சார்…” கெஞ்சினான் ராஜா.

ஒரு கேலிப்பொருள் கிடைத்ததைப் போல ராஜாவைப் பார்த்தது கும்பல்...

“யோவ், இந்த ட்ரைன்தான் கெடச்சுதா உனக்கு? இன்னும் எத்தனையோ ட்ரைன் பின்னாடி வருது.. அதுலே எதுலேயாச்சும் ஏறிக்கோ..”



“ஆமா, இந்த ட்ரைன் ஃபுள்ளா எங்களுது... வேணுன்னா அடுத்த ட்ரைன்ல சீட் கெடைக்குமா பாரு...”

இன்னொருவன் இன்னும் என்னவோ சொன்னான்... அதற்குள் கூவிக்கொண்டே நகர்ந்தது ரயில்..

தடக்.. தடக்.. தடக்.. என்று நகரும் ரயிலின் இரும்பு சக்கரங்கள் உண்டாக்கிய சத்தங்கள் ஒவ்வொன்றும் இடியாக இறங்கின ராஜாவின் தலையில்!

அங்கேயே தலையில் கைவைத்துக் கொண்டு அமர்ந்தான் ராஜா!

------------------------

ராஜாவுக்கு நேர்ந்த இந்த அவலம்- அநியாயம் - நம்மில் யாருக்கு நேர்ந்தாலும் சகிக்க மாட்டோம். அந்தக் கல்லூரி மாணவர்களின் பொறுப்பற்ற போக்கு கடும் தண்டனைக்குரியது. ஆனால் அவர்களை இங்கு தண்டிக்க வழியும் வாய்ப்பும் இல்லை என்பது வேறு விஷயம். அதே விதமான பொறுப்பற்ற போக்கும் சுயநலமும் நம்மிடமும் இருப்பதை அறிவோமா? எப்படி?

நமது சுயநலம் மற்றும் பொறுப்பின்மை காரணமாக நாம் ஒரு சமூகமாக நின்று நடத்திக்கொண்டிருக்கும் அக்கிரமத்தைப்பற்றி சற்று சிந்தித்துப்பார்ப்போம் வாருங்கள். இன்று நாட்டில் பரவலாக நடந்துகொண்டிருக்கும் சிசுக்கொலைகளுக்கும் கருக்கொலைகளுக்கும் முக்கிய காரணம் நமக்குள் புரையேறிப் போயுள்ள சுயநலம்தானே? நாம் இங்கு வசதியாக வாழவேண்டும். அடுத்த தலைமுறை இங்கு வந்து நம்மிடம் உள்ள உணவை - வாழ்க்கை வசதிகளை - ஆடம்பரங்களைக் - குறைத்துவிடும் என்று கருதி அவர்களைக் கொன்றொழிக்கும் செயல்தானே இந்தக் கொலைகள்? நபிகள் நாயகம்(ஸல்), ‘உன் குழந்தை உன்னுடன் உண்ணும் என அஞ்சி அதனை நீ கொல்வது பெரும்பாவங்களில் ஒன்று” என்று அவர்கள் கூறினார்கள்.

மக்களின் சுயநலத்தின் காரணமாக பிள்ளை பெறுவதை பாரமாகக் கருதுகிறார்கள். சிசுவிலேயே சர்வ சாதாரணமாகக் கொன்றும் விடுகிறார்கள். ஒரு ஐநா அறிக்கைப்படி இந்தியாவில் நாளொன்றுக்கு 7000 பெண் சிசுக்கள் கருவிலேயே அழிக்கப்படுகின்றன. இந்த கருக்கொலைகள் போக குழந்தைகள் பிறந்தபின் கொன்றொழிக்கும் அவலங்கள் நாடுமுழுக்க நடந்து வருவதை நாம் அனைவரும் நன்றாகவே அறிவோம். விஷ ஊசிகளும் கள்ளிப்பாலும் நெல்மணிகளும் பிறந்த குழந்தைகளை பதம் பார்ப்பதை நாம் அறிவோம். எந்த விலங்குகளும் கூட செய்யத் துணியாத அந்த கருணையற்ற அற்ற செயல் அது! அச்செயலை குடும்பக் கட்டுப்பாடு என்று அழகிய



பெயர் சூட்டி சமூகமும் ஆமோதிக்கிறது. நாட்டு வளங்களை முறைப்படி கையாளத் திறமையில்லாத சுயநல அரசியல் வாதிகளும் அதைத் தங்கள் குறைகளை மறைக்கக் கேடயமாக பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஊழலால் நாட்டைக் கொள்ளை அடித்தவர்கள் மக்கள் தொகைப் பெருக்கமே நாடு முன்னேறாததற்குக் காரணம் என்று மக்களுக்கு மூளைச்சலவை செய்கின்றனர்.

இப்படிப்பட்ட அவல நிலை உருவாகுவதற்க்குக் காரணம் இவ்வுலகைப் பற்றிய நமது சுயநலக் கண்ணோட்டம்தான். ரயிலில் முதல் ஸ்டேஷனில் ஏறி இடம் பிடித்தவர்கள் ரயிலே அவர்களுக்குத்தான் சொந்தம் என்பது போல நடந்துகொள்வதை நாம் காணலாம். இடம் கிடைத்தவுடன் தங்களை அடுத்த காலி இருக்கைகளில் எல்லாம் தங்கள் உடமைகளைப் பரப்பியும் காலை நீட்டியும் அடைத்துக் கொள்வதை அன்றாடம் காணலாம். அடுத்தடுத்த ஸ்டேஷன்களில் யாரும் ஏறவும் கூடாது, ஏறுவோர் தங்கள் சுகங்களைக் கெடுத்துவிடவும் கூடாது! இந்த மோசமான மனோபாவம்தான் நம்மில் பெரும்பாலோருக்கும் உள்ளது. வரும் தலைமுறைகள் எக்கேடு கேட்டுப் போனால் என்ன, நாம் சுகமாக வாழ்ந்தால் போதும். என்ற கொடிய எண்ணம்தான் நம்மை நம் குழந்தைகளையே கொல்ல வைக்கிறது.

## நமக்கென்ன உரிமை உள்ளது?

இன்னொன்றும் நாம் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்... இன்று இந்த பூமியின்மீது வாழும் நாமும் இதன் உரிமையாளர்கள் அல்ல. நாமும் தற்காலிக வாசம் செய்ய வந்தவர்கள். ஒரு நாள் இந்த இருப்பிடத்தை விட்டு தூக்கி எறியப்படுவோம். இனி இங்கு வர இருபவர்களைத் தடுக்க எந்த உரிமையும் நமக்குக் கிடையாது. மீறி யாராவது ‘இனி வரும் தலைமுறை கஷ்டப்படகூடாது என்ற இரக்க உணர்வினாலேயே அவர்களை முளையிலேயே கொல்கிறோம்’ என்று எண்ணினால் அவர்கள் செய்யவேண்டியதெல்லாம் தங்கள் இடத்தை விட்டுக்கொடுக்க முன்வருவதுதானே?

ஆனால் இவ்வுலகின் உண்மையான சொந்தக்காரனான இறைவனோ இக்கொடிய செயல் தண்டனைக்குரியது என்கிறான். தனது இறுதி வேதமான திருக்குர்ஆனில் இச்செயலைத் தடுப்பதைப் பாருங்கள்:

- **“வறுமைக்கு அஞ்சி உங்கள் குழந்தைகளைக் கொல்லாதீர்கள்! அவர்களுக்கும், உங்களுக்கும் நாமே உணவளிக்கிறோம். அவர்களைக் கொல்வது பெரிய குற்றமாகும்” (திருக்குர்ஆன் 17:31)**

இந்த தடையையும் மீறி யாராவது இப்பாவத்தைச் செய்தால் அவர்களுக்கு மறுமை நாளில் இவர்களால் கொல்லப்பட்ட குழந்தைகளே இவர்களுக்கு தண்டனையை பெற்றுத் தருவார்கள் என்பதையும் இறைவன் கூறுகிறான்:

- **“உயிர்கள் மீண்டும் (உடல்களுடன்) சேர்க்கப்படும் போது, என்ன பாவத்துக்காக கொல்லப்பட்டாள் என்று உயிருடன் புதைக்கப்பட்டவள் விசாரிக்கப்படும்போது, (உங்கள் நிலையை எண்ணிப் பாருங்கள்!)” (திருக்குர்ஆன் 81:7-9)**

எனவே திருத்த வேண்டியவற்றைத் திருத்திக் கொள்வோமாக!

# குழந்தைச் செல்வங்களின் இழப்பை ஈடு செய்வது யார்?

## தொடர்பான செய்திகள்:

● ‘‘ஆந்திர மக்கள் அதிக குழந்தைகளை பெறவேண்டாம். குடும்பக் கட்டுப்பாடு செய்ய வேண்டும் என்று முன்பு நான் கூறினேன். ஏன்? நானே ஒரு மகனுடன் நிறுத்திக்கொண்டேன். இப்போது ஜனத்தொகையை பெருக்குங்கள் என்று உங்களை கேட்டுக்கொள்கிறேன்’’ - சந்திரபாபு நாயுடு ((தினமலர், மாலைமலர், தினபூமி.. 2015 செய்தி)

● “ இந்து தம்பதியர் அதிக அளவு குழந்தைகளை பெற்றுக்கொள்வது குறித்து தீவிரமாக ஆலோசிக்க வேண்டும்” - மத்திய சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை இணை அமைச்சர் கிரிராஜ் சிங் (தினபூமி செய்தி Oct 23, 2016 )

● ”இந்து தம்பதிகள் அதிக குழந்தைகளை பெறவேண்டும்” - உத்தரபிரதேச மாநிலம் ஆக்ராவில் ஆர்.எஸ்.எஸ். மாநாட்டில் தலைவர் மோகன் பகவத் தெரிவித்துள்ளார். (தினபூமி- Dec 9, 2016)

----------------------------

இறைவன் மக்களுக்கு வகுத்து வழங்கும் வாழ்க்கை நெறி இயற்கையானது. குறைகளற்றது. அதைத் தவற விட்டோர்களின் நிலை இதுதான். மனிதர்களையும் அவர்களுக்காக இவ்வுலகையும் படைத்தவன் பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னரே எச்சரித்தான்....

● **‘நீங்கள் வறுமைக்குப் பயந்து உங்களுடைய குழந்தைகளைக் கொலை செய்யாதீர்கள் அவர்களுக்கும் உங்களுக்கும் நாமே உணவை (வாழ்க்கை வசதிகளையும்) அளிக்கின்றோம் - அவர்களைக் கொல்லுதல் நிச்சயமாகப் பெரும் பிழையாகும்’ (அல்-குர்ஆன் 17:31)**

இந்த எச்சரிக்கையைப் பாடமாக எடுத்துக் கொண்டு வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்கள் குழந்தைச் செல்வங்கள் மூலம் உண்டான அருட்கொடைகளை இழக்கவில்லை. மக்கள்தொகைப் பெருக்கமே பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணம் என்ற அரசாங்கங்களின் பொய்கள் மூலம் அவர்கள் ஏமாறவில்லை. மாறாக தங்கள் உணவு மற்றும் வசதிகள் குறைந்துவிடுமோ என்று பயந்து சுயநல நோக்கோடு தங்கள் மக்களை தாங்களாகவே கொன்றொழித்தவர்கள் தாங்கள் செய்தது மிகப்பெரிய பிழை என்பதை இறுதியாக உணர்ந்திருக்கிறார்கள். அதற்கு இவ்வளவு காலம் பிடித்திருக்கிறது! இன்னும் அதை வேறு பலர் உணரவில்லை என்பது வேதனை கலந்த வேடிக்கை! மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் சந்திரபாபு நாயுடு மேற்கண்டவாறு பேசியதைத் தொடர்ந்து நாட்டில் பலரின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளானார் என்பதைக் காணும்போது உண்மையை உணர்ந்தவர்களால் சிரிக்காமல் இருக்க முடியாது!

## காலம்கடந்த ஞானோதயம்

பல கசப்பான அனுபவங்களையும் ஈடுசெய்ய முடியாத எண்ணற்ற இழப்புகளையும் சந்தித்துவிட்டு இறுதியில் ஞானோதயம் அடைவதால் என்ன பயன்?

இதனால் இனங்களின் இனப்பெருக்கம் தடைபட்டது ஒருபுறம் இருக்கட்டும. ஆனால் இதைத் தவிர உண்டான வேறு பல இழப்புகளை

ஈடு செய்வது யார்? மக்களை ஏமாற்றிய அரசாங்கங்கள் இதற்கு ஏதாவது நஷ்டஈடு திட்டங்கள் வைத்துள்ளார்களா?

● பல குடும்பங்களில் தந்தையும் தாயும் முதியோர் ஆன நிலையில் அவர்களைப் பராமரிக்கவோ அன்பு காட்டவோ ஆதரிக்கவோ ஆளில்லாத நிலை. வயதாகி நோயுற்ற நிலையில் மருத்துவமனைகளில் அவர்கள் அவசர சிகிச்சைப் பிரிவில் இருந்தாலும் அவர்களுக்கு துணை நிற்கவோ ஆதரவளிக்கவோ ஆறுதல் அளிக்கவோ யாரும் இல்லை. முதியோர் இல்லங்களின் அவலங்கள் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

● பல குடும்பங்கள் தங்களுக்கு ஆண் சந்ததி வேண்டும் என்பதற்காக தங்களுக்குப் பிறந்த பெண்சிசுக்களை கொன்றொழித்தன. அதனால் அக்குடும்பங்களில் அந்தப் பெண்குழந்தைகளில் இருந்து கிடைக்கக்கூடிய தனிபாசம், மென்மை, போன்ற விலைமதிப்பற்ற பல நன்மைகளும் இழப்படைந்த நிலை.

அரசாங்கங்கள் தங்கள் அறியாமையின் காரணமாகவும் தங்கள் கையாலாகாத்தனத்தை மறைப்பதற்காகவும் நாட்டு மக்களின்மீது திணித்த கொடுமைக்கு பல குடும்பங்கள் தங்கள் ஈடில்லாத பொக்கிஷங்களை தொலைத்து விட்டு நிற்கின்றன. பல உயிர்களை காவு கொடுத்து இறுதியில் அவர்கள் தேடிக் கொண்டது பாதிக்கப் பட்டவர்களின் சாபத்தை மட்டுமல்ல. இவ்வுலகத்தின் உரிமையாளனின் கோபத்தையும்தான்! அது நாளை இறுதித் தீர்ப்பு நாளின் போது நரகத்தின் உருவில் காத்திருக்கிறது!

● **“உயிருடன் புதைக்கப்பட்டவளும் வினவப்படும் போது. எக்குற்றத்திற்காக கொல்லப்பட்டாள் (என்று வினவப்படும் போது) (திருக்குர்ஆன் 82:8-9)**

# குழந்தைச் செல்வங்களை அவர்கள் எவ்வாறெல்லாம் தொலைத்தார்கள்?



முதலைகளுக்கு உணவாக..



நீரில் மூழ்கடித்து..

# பெண்குழந்தை என்ற அருட்கொடை

**செய்தி: ஆண் குழந்தைகளை அதிகம் விரும்பும் இந்தியப் பெற்றோர்கள்**

இந்தோனேஷியா போன்ற நாடுகளில் கூட, 100 பெண்களுக்கு 101 ஆண்கள் என்ற அளவில் விகிதாச்சாரம் உள்ளது. ஆனால், இந்தியாவில் 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, 1000 ஆண்களுக்கு 943 பெண்கள் என்ற விகித்தில் பாலின சம நிலை உள்ளது. இந்தியாவில் பெற்றோர் அதிகம் ஆண் குழந்தைகளை விரும்புவதற்கான காரணம் குறித்து, ஐநாவின் மக்கள் தொகை நிதி நடத்திய ஆய்வில் தகவல்கள் வெளிவந்தன. அதில் “ஆண் குழந்தைகளை பெற்றால் தங்கள் குடும்ப பொருளாதார சூழல் மேம்படும் என என இந்திய பெற்றோர் எண்ணுகின்றனர். இந்தியாவில் பல்வேறு துறைகளில் பெண்கள் சாதித்து வரும் சூழலிலும், இந்த எண்ணம் தொடர்கிறது.

ஆண்களுக்கு நிகராக பெண்களும் வருமானம் ஈட்டி, பொருளாதார நிலையில் உயர்ந்து வரும் சூழலிலும் இந்திய பெற்றோர் ஆண் குழந்தைகளை அதிகம் விரும்புவதற்கு காரணம் இந்திய கலாச்சாரமே. இறுதி சடங்கு செய்வதற்கு ஆண் குழந்தைகள் தேவை என்ற எண்ணம் உள்ளது. மேலும், பெண் குழந்தை என்றால் அதிகமான வரதட்சணை தர வேண்டும். அதே சமயம் ஆண் குழந்தை என்றால் வரதட்சனை வரவாக வரும். வரதட்சணை வாங்குவது சட்டப்படி குற்றம் என்றாலும் சமூகத்தில் இந்த பழக்கம் இன்னமும் நீடிக்கிறது” என ஐநா அறிக்கையில் ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டு இருந்தது. (தமிழ் இந்து நாளிதழ் - Published : 29 Jan 2018)

------------------------

## இறந்தும் பயன்தரும் நற்காரியங்கள்

● நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஒரு மனிதன் இறந்து விட்டால் மூன்று செயல்கள் தவிர மற்ற அனைத்துமே (பயன் தராமல்) நின்று விடுகின்றன.

*1. நிலையான தர்மம். 2. பிறருக்கு பயன்பெறும் வகையில் அவன் கற்றுக்கொடுத்த கல்வி. 3. அவனுக்காக பிரார்த்தனை செய்கிற நல்ல குழந்தைகள். (முஸ்லிம்)*

குழந்தைகளை நாம் அன்புடனும் ஒழுக்கத்துடனும் வளர்ப்போம் என்றால், நாம் மரணித்த பிறகும் நமக்காக அவர்கள் இறைவனிடம் பிரார்த்தனை செய்து கொண்டே இருப்பார்கள்.

## குழந்தை எனும் பாக்கியம்

● நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: *கண்ணியமும் மகத்துவமும் மிக்க இறைவன், சொர்க்கத்தில் ஒரு அடியானின் தகுதியை உயர்த்துவான். “இறைவா, இது எனக்கு எப்படி கிடைத்தது?” என்று அவன் கேட்கும் போது, “உனக்காக உன் குழந்தை பாவ மன்னிப்பு கேட்டது*



அதனால்தான்," என்று இறைவன் விடையளிப்பான். (அஹ்மத்)

அத்தகைய பாக்கியம் நமக்கு கிடைப்பதற்கு நாம் செய்யவேண்டியதெல்லாம் நமது குழந்தைகளை நல்ல முறையில் வளர்த்தாலே போதும். அதற்கு குழந்தைகள் நமக்கு கிடைத்த பாக்கியமாக நாம் கருத வேண்டும். அதிலும் பெண்குழந்தை என்றால் அது பெரும் பாக்கியம்!

**குழந்தைகளைக் கொல்வது பாவம்**

பொருளாதார சுமை அதிகரிக்கும் என்று எண்ணி கூட நமது குழந்தைகளை கொன்று விடகூடாது.

● இறைவன் இவ்வாறு எச்சரிக்கிறான்:

**வறுமைக்கு அஞ்சி உங்கள் குழந்தைகளை கொன்று விடாதீர்கள். அவர்களுக்கும் உங்களுக்கும் நாமே உணவளிக்கிறோம் (திருக்குர்ஆன் 17:31)**


இந்த எச்சரிக்கையோடு சேர்த்து நமக்கும் நமது குழந்தைக்கும் தேவையானவற்றிற்கு இறைவனே பொறுப்பு என்கிற வாக்குறுதியையும் தருகிறான்.

**ஆணும் பெண்ணும் அவன் தருவதே! யாரையும் குறை காணகூடாது**

இவ்வாழ்க்கை என்ற பரீட்சையில் இறைவன் நாடியவாறு தான் நாடியோருக்கு பரீட்சைகளை அமைக்கிறான். அதற்கேற்ப உறவுகளை அமைக்கிறான்...

● **வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியது. அவன் நாடியதைப் படைக்கிறான். தான் நாடியோருக்குப் பெண் குழந்தைகளை வழங்குகிறான். தான் நாடியோருக்கு ஆண் குழந்தைகளை வழங்குகிறான். அல்லது ஆண்களையும், பெண்களையும் சேர்த்து அவர்களுக்கு வழங்குகிறான். தான் நாடியோரை மலடாக ஆக்குகிறான். அவன் அறிந்தவன் ஆற்றலுடையவன். (திருக்குர்ஆன் 42:49,50)**

(அல்லாஹ் என்றால் வணக்கத்துக்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்று பொருள்)



**பெண் குழந்தைகளை வெறுப்பது குற்றம்!**

தாங்கள் பெற்ற பெண் குழந்தைகளை கண்டு வெறுப்பு அடைகிற

பெற்றோர்களை இறைவன் கடுமையாக சாடுகிறான்.

● **அறிவில்லாமல் மடமையின் காரணமாகத் தமது குழந்தைகளைக் கொன்றவர்களும், இறைவன் பெயரால் இட்டுக் கட்டி, இறைவன் தமக்கு வழங்கியதைத் தடுக்கப்பட்டதாக ஆக்கிக் கொண்டோரும் இழப்பு அடைந்தனர். வழி கெட்டனர் நேர்வழி பெறவில்லை. (திருக்குர்ஆன் 6:140)**

என்று கண்டிக்கிற இறைவன், இன்னொரு வசனத்தில் கூறுகிறான்:

● **அவர்களில் ஒருவருக்கு பெண் குழந்தை பிறந்த நற்செய்தி கூறப்பட்டால் அவனது முகம் கறுத்து கவலைப்பட்டவனாக ஆகி விடுகிறான். அவனுக்கு கூறப்பட்ட கேட்ட செய்தியினால் சமுதாயத்திலிருந்து மறைந்து வாழ்கிறான். இழிவுடன் இதை வைத்துக்கொள்வதா அல்லது மண்ணில் புதைத்து விடுவதா? (என்று எண்ணுகிறான்). கவனத்தில் கொள்ளுங்கள் அவன் தீர்பளிப்பது மிகவும் கேட்டது. (திருக்குர்ஆன் 16:58)**



பெண் குழந்தைகளை வெறுப்பதோ அதனால் கவலைப்படுவதோ, அதை இழிவானதாக கருதுவதோ, அதை கொலை செய்வதோ இறைவனிடத்தில் மிகப்பெரிய பாவமான காரியமாக இருக்கிறது.

### பெண்குழந்தை வரவு ஓர் நற்செய்தி

மேற்படி வசனத்தில் பெண் குழந்தை பிறந்த செய்தியை பற்றி சொல்கிறபோது அது ஒரு நற்செய்தி என்கிறான் அவளைப் படைத்தவன்! பெண் குழந்தைகளை வெறுப்பவர்கள் இதை சிந்தித்து பார்க்க வேண்டும். பெண் குழந்தைகள் நமக்கு பாரமாக இருக்கும் என்றால், இறைவன் அதை நற்செய்தி என்று சொல்வானா?

● நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

”ஒருவருக்கு பெண் குழந்தை பிறந்து விட்டால் அந்த இடத்திற்கு அல்லாஹ் வானவர்களை அனுப்புகிறான். அவர்கள் அங்கு கூறுவார்கள்: ”வீட்டில் உள்ளவர்களே! உங்கள் மீது சாந்தி உண்டாகட்டும்” பின்னர் அக்குழந்தையை தன் இறக்கைகளால் அரவணைத்துக் கொள்கிறார்கள். மேலும் அதன் தலை மீது கரங்களால் தடவியவாறு கூறுகின்றார்கள் ”இது ஒரு பலவீனமான ஆன்மாவாகும் இக்குழந்தையை பாதுகாத்து வளர்ப்பவருக்கு மறுமைநாள் வரையில் இறைவனின் உதவி கிடைத்துக் கொண்டே இருக்கும்” அறிவிப்பாளர்: நபித்இப்னு ஷுரைத் (ரலி) (ஆதாரம்: அல்முஅஜமுஸ் ஸகீர் 243)

### சொர்க்கத்திற்கு வழி

● நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், “யார் இரு பெண் குழந்தைகளை

அவர்கள் பருவ வயது அடைகிற வரை பொறுப்பேற்று கருத்தாக வளர்க்கிறாரோ, அவரும் நானும் மறுமை நாளில் இப்படி வருவோம்" என்று சொல்லி தமது இரு விரல்களையும் இணைத்து காட்டினார்கள் (முஸ்லிம்)

**நரகத்திலிருந்து தடுக்கும் திரை**

● நபி(ஸல்) அவர்களின் துணைவியார் ஆயிஷா(ரலி) அறிவித்தார்

"என்னிடம் ஏதேனும் (தரும்படி) கேட்டு ஒரு பெண்மணி வந்தார். அவருடன் இரண்டு பெண் குழந்தைகள் இருந்தனர். அப்போது ஒரே ஒரு பேரீச்சம் பழத்தை தவிர வேறெதுவும் அவருக்கு என்னிடம் கிடைக்கவில்லை. எனவே, நான் அதை அவருக்குக் கொடுத்தேன். உடனே அதனை அவர் இரண்டாகப் பிட்டு குழந்தைகள் இருவருக்கும் பங்கிட்டுக் கொடுத்தார்கள். பிறகு அப்பெண்மணி எழுந்து சென்றார். பின்னர் நபி(ஸல்) அவர்கள் வந்தார்கள். அவர்களிடம் இது பற்றி நான் சொன்னேன். அதற்கு நபி(ஸல்) அவர்கள், "யார் இந்தப் பெண் குழந்தைகளில் ஒன்றுக்குப் பொறுப்பேற்று நன்மை புரிவாரோ அவருக்கு அந்தக் குழந்தைகள் நரகத்திலிருந்து தடுக்கும் திரையாக இருப்பார்கள்" என்றார்கள். (புஹாரி)

பெண் குழந்தைகளை ஒழுக்கமான முறையில் வளர்த்து ஆளாக்கும் போது அதுவே இம்மையில் தொடர்ந்து இறை உதவி கிடைப்பதற்கும் மறுமையில் நாம் சொர்க்கத்திற்கு செல்வதற்கும் காரணமாகி விடுகிறது என்பதை புரிந்து கொண்டு அதன்படி செயல்படுபவர்கள் எவ்வளவு பாக்கியவான்கள்!

# இறைபொருத்தம் நாடி தர்மம் செய்யுங்கள்!

**● இறைவனுக்காக அழகிய கடன் வழங்குவோர் யார்? அதை அவருக்குப் பன்மடங்காக (அவன்) பெருக்குவான். இறைவன் குறைவாகவும் வழங்குகிறான். தாராளமாகவும் வழங்குகிறான். அவனிடமே திரும்பக் கொண்டு வரப்படுவீர்கள்.**

**(திருக்குர்ஆன் 2:245)**

**● இறைவனின் திருப்தியைப் பெறுவதற்காகவும், தமக்குள்ளே இருக்கும் உறுதியான நம்பிக்கைக்காகவும் தமது செல்வங்களை (நல் வழியில்) செலவிடுவோரின் உதாரணம், உயரமான இடத்தில் அமைந்த தோட்டம். பெருமழை விழுந்ததும் அத்தோட்டம் இருமடங்காக அதன் உணவுப் பொருட்களை வழங்குகிறது. பெருமழை விழா விட்டாலும் தூரல் (போதும்). நீங்கள் செய்பவற்றை இறைவன் பார்ப்பவன்.**

**(திருக்குர்ஆன் 2:265)**

**● நல்லவற்றில் நீங்கள் எதைச் செலவிட்டாலும் அது உங்களுக்கே. இறைவனின் திருப்தியைப் பெறவே செலவிடுகிறீர்கள். நல்லவற்றில் நீங்கள் எதைச் செலவிட்டாலும் உங்களுக்கே அது முழுமையாக வழங்கப்படும். நீங்கள் அநீதி இழைக்கப்பட மாட்டீர்கள்.**

**(திருக்குர்ஆன் 2:272)**

# இந்தியாவில் முஸ்லிம்களின் மக்கள்தொகை அதிகரிக்கிறதா?

● செய்தி : "முஸ்லிம்கள் இரண்டு குழந்தைகளை மட்டும் பெற்றுக்கொள்ளும் வகையில் சட்டத்தை அரசு அமல்படுத்த வேண்டும் - இந்துக்கள் 2 குழந்தைகளுடன் போதும் என்று நிறுத்திவிடுகிறார்கள். அக்குழந்தைகளில் கல்வி, வாழ்க்கைத்தரம் குறித்து கவலைப்படுகிறார்கள். ஆனால், முஸ்லிம் மக்கள் அப்படியில்லை. 10, 12 குழந்தைகள் பெற்றுக்கொள்கின்றனர். இதனால் இந்துக்கள் செலுத்தும் வரிப்பணமும் வீணாகிறது." - ராஜஸ்தான் பாஜக எம்.எல்.ஏ. பன்வாரிலால் சிங்கால்.

- ( Public TV January 1, 2018)

----------------------------

## இஸ்லாம் இனம் சார்ந்ததல்ல, மாறாக கொள்கை!

ஒன்றே மனிதகுலம், ஒருவனே இறைவன் என்பதையும் இவ்வுலக வாழ்வுக்குப் பின் மறுமை வாழ்வு உள்ளது, சொர்க்கமும் நரகமும் உண்டு என்ற உண்மைகளில் நம்பிக்கை கொண்டு அந்த இறைவன் வகுத்து வழங்கும் வாழ்க்கைத் திட்டத்தை ஏற்று வாழுதலுக்கே இஸ்லாம் என்று கூறப்படும். இதை ஒருவர் ஏற்று வாழ ஆரம்பித்தால் அவர் முஸ்லிம் ஆகிவிடுகிறார். மாறாக முஸ்லிம் என்ற பட்டம் பிறப்பின் அடிப்படையில் வருவதல்ல. நம்பிக்கை மற்றும் செயல்பாட்டின் அடிப்படையில் வருவது அது!

எனவே இஸ்லாம் என்பது உலகெங்கும் வெகு வேகமாக பரவிவரும் ஒரு வாழ்வியல் கொள்கை. இக்கொள்கையை ஏற்றவர்களுக்குப் பெயர்தான் முஸ்லிம்கள். இதை யாரும் ஏற்றுக்கொண்டு அதன்படி வாழலாம். இதை ஏற்பவர்களின் விகிதம் பெருகப்பெருக இயற்கையாகவே இஸ்லாமியர்களின் எண்ணிக்கை பெருகும் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

## இஸ்லாமியர் எண்ணிக்கை மற்ற மதத்தவரை விட எவ்வாறு பெருகுகிறது?

இன்று உலக மக்கள்தொகையில் கால்வாசிக்கும் அதிகமான மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள இந்த மார்க்கம் தொடர்ந்து வெகுவேகமாக பரவிவருகிறது என்பது மறுக்க முடியாத உண்மை! மற்ற சமூகங்களோடு ஒப்பிடும்போது இஸ்லாமியர்களின் எண்ணிக்கை இரண்டு வழிகளில் பெருகுகிறது.

1. இயற்கையான இனப்பெருக்கம் மூலம்.

2. அன்றாடம் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்களின் வருகை மூலம்.



இஸ்லாத்தில் திருமணம் மற்றும் குழந்தை பிறப்பு, குழந்தை பராமரிப்பு, குடும்ப உறவுகள் போன்றவை இயற்கையான ரீதியில் ஊக்குவிக்கப் படுவதால் இஸ்லாமியர்களின் மக்கள்தொகைப் பெருக்கமும் இயற்கையாகவே இருந்துவருகின்றது. ஆனால் இஸ்லாமியர் அல்லாத மக்களிடையே இன்று திருமணங்கள் நடப்பது அப்பூர்வமாகி வருவது கண்கூடு. படித்தவர்கள் பெரும்பாலும் மணம்முடிக்க மறுக்கின்றனர். திருமணம் இல்லாமலேயே ஆணும் பெண்ணும் இணைந்து வாழுதல், திருமண வயதை தள்ளிப் போடுதல், வரதட்சணை போன்ற காரணங்களுக்காக முதிர்கன்னிகள் தேங்குதல் போன்ற நடைமுறைகள் இன்னும் திருத்தப் படாமல் தொடர்கின்றன. அப்படியே திருமணம் நடந்தாலும் குழந்தைகள் பெற்றுக்கொள்ள எந்த ஆர்வமும் இவர்களிடையே இருப்பதில்லை. அப்படியே குழந்தைகள் பிறந்தாலும் கருக்கொலை, பெண்சிசுக்கொலை, குடும்பக்கட்டுப்பாடு போன்ற காரணங்களால் அவை அழிக்கப்படுகின்றன அல்லது கட்டுப்படுத்தப் படுகின்றன.

இஸ்லாமியர்களை ஒப்பிடும்போது அவர்களிடையே இனப்பெருக்கம் குறைந்துள்ளது. ஒரு இனம் அபிவிருத்தியாக வேண்டும் என்றால் அங்கு குறைந்த பட்ச இனப்பெருக்க விகிதம் 2.1 இருக்க வேண்டும். ஆனால் இன்று ஐரோப்பிய நாடுகளில் இவ்விகிதம் 1.3 இலிருந்து 1.9 வரையிலும் சிங்கப்பூர், ஜப்பான் தாய்வான் போன்ற நாடுகளில் 0.8 முதல் 1.4 வரையிலும் உள்ளன (இந்தியாவில் சராசரி இனப்பெருக்க விகிதம் 2.51 என்று உள்ளது. இதில் அனைத்து சமூகங்களும் உட்படும்)

இன்று சராசரி உலக மக்கள்தொகை வளர்ச்சி 2.3% விகிதத்தில் உள்ளது. ஆனால் இஸ்லாத்தின் வளர்ச்சியோ 2.9% விகிதத்தில் உள்ளது

## முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடு?

ஆக, இஸ்லாமியர்களின் மக்கள்தொகை என்பது இயற்கையாகவே பெருகி வருவதோடு அனுதினமும் இம்மார்க்கத்தில் இணைபவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் பெருகி வருவதால் உலகில் முஸ்லிம்களின் எண்ணிக்கை விகிதாச்சாரம் என்பது நிலையான ஒன்றல்ல. இதே காரணத்தால் முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடு என்பதும் பொருந்தாத ஒன்றே!

இன்னும் ஒரு காலம் வரும். அப்போது இந்த பூமியில் வாழ்கின்ற அனைத்து மக்களும் இஸ்லாமியர்களாக மாறவும் வாய்ப்பு உண்டு. அப்போது எவ்வாறு இடஒதுக்கீடு செய்வீர்கள்? ஏனெனில் இறைவன் கூறுகிறான்:

- **“தம் வாய்களைக் கொண்டே இறைவனின் ஒளியை (ஊதி) அணைத்துவிட அவர்கள் விரும்புகின்றார்கள் - ஆனால் இறைமறுப்பாளர்கள் வெறுத்த போதிலும் இறைவன் தன் ஒளியை பூர்த்தியாக்கி வைக்காமல் இருக்க மாட்டான்.“** (அல்-குர்ஆன் 9:32)


**திருக்குர்ஆன் நற்செய்தி மலர் - ஏஜெண்டுகள் தேவை**

**திருக்குர்ஆன் நற்செய்தி மலர் இதழுக்கு ஊர்வாரியாக விநியோகம் செய்ய முன்பணம் செலுத்தக்கூடிய ஏஜெண்டுகள் தேவை. கமிஷன் பற்றிய விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய எண்: 09886001357**

# எதிரலைகளுக்கு எதிராக எழுச்சி பெறும் மக்கள் இயக்கம்

வெட்ட வெட்ட வளரும் செடி போல இஸ்லாத்திற்கு எதிரான விமர்சனங்களும் எதிர்ப்பலைகளும் அதிகரிக்க அதிகரிக்க இஸ்லாம் சலிக்காமல் சளைக்காமல் வளர்ந்து கொண்டேயிருப்பதை நாம் இன்று உலகில் நிதர்சனமாகக் காணமுடிகிறது.

இவ்வுலகைப் படைத்தை இறைவன் வழங்கும் வாழ்வியல் கொள்கையே இஸ்லாம் என்பது. உலகில் மனிதகுலம் தோன்றிய நாள் முதலே அவ்வப்போது இவ்வுலகின் வெவ்வேறு பிரதேசங்களுக்கு அனுப்பப்பட்ட இறைத்தூதர்கள் யாவரும் இதையே போதித்தார்கள். உலகைப் படைத்த இறைவன் ஒருவனை மட்டுமே வணக்கத்திற்கு உரியவனாக ஏற்று அவன் நமக்குக் கற்பிக்கும் ஏவல்-விலக்கல்களை ஏற்று வாழ்ந்தால் இவ்வுலகிலும் அமைதிமிகு வாழ்வைக் காணலாம். மறுமையில் சொர்க்கத்தைப் பரிசாக அடையலாம் என்பதே இஸ்லாத்தின் சாரமாகும்.

## இஸ்லாம் சந்திக்கும் எதிர்ப்பலைகள்

ஒன்றே மனித குலம், மனிதர்கள் அனைவரும் சமமே சகோதரர்களே, படைத்தவன் மட்டுமே வணக்கத்திற்குரிய இறைவன், அவனை இடைத்தரகர்கள் இன்றி நேரடியாக வணங்கவேண்டும், உலகில் நன்மையை ஏவவும் வேண்டும் தீமையைத் தடுக்கவும் வேண்டும், சுயமரியாதையை கடைப்பிடிக்க வேண்டும் என்றெல்லாம் இம்மார்க்கம் போதிப்பதோடு நில்லாமல் இதனை ஏற்றுக்கொண்ட மக்கள் மூலம் அவற்றை நடைமுறைப் படுத்தவும் செய்கிறது. அநீதிகளுக்கு எதிரான மக்கள் இயக்கமாக உருவெடுக்கிறது இஸ்லாம்!

எனவே சமூகத்தின் உயர்மட்ட மற்றும் ஆதிக்க வர்க்கத்தினர் இம்மார்க்கத்திற்கு எதிராக அணிதிரள்கிறார்கள். அநீதி, அக்கிரமம், அடக்குமுறை, கொள்ளை, வட்டி, விபச்சாரம், போதைப்பொருட்கள் போன்றவற்றை ஆதாரமாகக் கொண்டு வயிறு வளர்ப்பவர்களால் இக்கொள்கையின் வளர்ச்சியை சகித்துக்கொள்ள முடிவதில்லை.

- நிறத்தின் இனத்தின் மொழியின் ஜாதியின் மேன்மைகளைக் கூறி மற்ற மக்களை அடிமைகளாக பாவித்து ஆதிக்கம் செய்து வாழ்வோருக்கு இஸ்லாம் கற்பிக்கும் மனித சமத்துவம் பிடிப்பதில்லை.

- இறைவனை நேரடியாக அணுக முடியும் என்று மக்கள் உணரும்போது இடைத்தரகர்களை அது அமைதி இழக்கச் செய்கிறது! மூடநம்பிக்கைகளை மக்களுக்கு இடையே பரப்பி அவற்றைக் கொண்டு காலாகாலமாக மக்களைச் சுரண்டி வாழ்பவர்கள் இம்மார்க்கத்தை எதிர்க்கிறார்கள்.

- மனிதனை இக்கொள்கை சுயமரியாதை உணர்வோடு வாழத் தூண்டுவதால் அதன் காரணமாக மக்கள் விழிப்புணர்வு பெற்று ஆதிக்க சக்திகளுக்கு எதிராகத் திரும்புகிறார்கள். அவர்களிடமிருந்து தங்கள் நாடுகளை விடுவிக்கவும் தங்கள் நாட்டுவளங்கள் கொள்ளை போவதைத் தடுக்கவும் போராடுகிறார்கள்.

## எழுச்சியைத் தடுக்க முனையும் தந்திரங்கள்

இன்று உலகில் இஸ்லாம் தனது தெளிவான கடவுள் கொள்கை மூலமாகவும் அது வலியுறுத்தும் தனிநபர் நல்லொழுக்கம், மனித சமத்துவம், சகோதரத்துவம், பெண்ணுரிமைகள்,குடும்ப கட்டமைப்பு, மனித உரிமைகள், சமூகத் தீமைகளுக்கு தீர்வுகள் போன்றவற்றின் மூலமாகவும் உலகெங்கும் பெருவாரியான மக்களை இடையறாது கவர்ந்து வருகிறது. இஸ்லாம் என்ற பேரியக்கத்தில் உலகம் தொடர்ந்து இணைந்து வருகிறது. இந்த எழுச்சியை பரவவிடாமல் தடுக்க பல தந்திரங்கள் கையாளப் படுகின்றன:

● தங்களின் சக்திவாய்ந்த ஊடகங்களைக் கொண்டு தங்கள் நாட்டின் விடுதலைக்காகவும் மனித உரிமைகளுக்காகவும் போராடுவோரை கிளர்ச்சியாளர்கள் என்றும் தீவிரவாதிகள் என்றும் பயங்கரவாதிகள் என்றும் முத்திரை குத்தி சிறைகளுக்குள் வைத்து சித்திரவதை செய்து அச்சுறுத்துதல்.

● இஸ்லாமியர்கள் அதிகம் உள்ள நாடுகளில் கிளர்ச்சியாளர்களை உருவாக்கி அவர்களுக்கு ஆயுத பலமளித்து அவர்களைக் கொண்டே கலவரங்கள் மூட்டியும் பயங்கரவாத தாக்குதல்கள்,குண்டு வெடிப்புகள் போன்றவை நடத்தியும் இஸ்லாமியர்களைக் கொல்வது, அதன்மூலம் இஸ்லாத்தையும் இஸ்லாமியர்களையும் பற்றி தப்பெண்ணம் உருவாக்குவது.

● தன் கையாட்களைக் கொண்டு இஸ்லாத்தை தவறான ஒளியில் சித்தரிப்பதற்காக திரைப்படங்கள், கதைகள் புனைந்து அவற்றை ஊடகங்கள், சமூக வலைதளங்கள் மூலம் பரப்பி இஸ்லாத்தின் மீது வெறுப்பை உருவாக்குதல்.

இன்னும் இவைபோன்ற பலதும் செய்யப்பட்டாலும் இந்த இறைவனின் மார்க்கம் தடைபடாமல் வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதை புள்ளிவிவரங்கள் சுட்டிக் காட்டுகின்றன. (www.pewresearch.org)

## வன்முறைக்கு எதிரானது இஸ்லாம்

ஆனால் உண்மையில் இஸ்லாம் எந்த ஒரு உயிரையும் அநியாயமாகக் கொல்வதோ துன்புறுத்துவதோ கூடாது என்று வன்மையாகத் தடுக்கிறது. அப்பாவிகளைக் கொல்வதும் துன்புறுத்துவதும் பெரும் பாவம் அதை ஒரு முஸ்லிம் செய்தாலும் முஸ்லிம் அல்லாதவர் செய்தாலும் மறுமையில் அதற்கு நரக தண்டனை உண்டென்று எச்சரிக்கிறது குர்ஆன்:

● **எனவே, எவர் ஓர் அணுவளவு நன்மை செய்திருந்தாலும் அத(ற்குரிய பல)னை அவர் கண்டு கொள்வார். அன்றியும், எவர் ஓர் அணுவளவு தீமை செய்திருந்தாலும், அ(தற்குரிய பல)னையும் அவர் கண்டு கொள்வார். (திருக்குர்ஆன் 99:7,8)**


மனிதனை மனிதனுக்கு எதிரியாக்கி ஏதேனும் ஒரு நாட்டையோ இனத்தையோ உயர்த்தவோ அழிக்கவோ வந்ததல்ல இஸ்லாம். மாறாக மனித மனங்களை பண்படுத்தி அதன்வழி உலகெங்கும் தர்மத்தையும் நீதியையும் அமைதியையும் நிலைநாட்டும் சுயசீர்திருத்த இயக்கமே இஸ்லாம் என்பதை விளங்கும்போது இன்றைய எதிரிகள் நாளை இதன் சேவகர்களாகவும் காவலர்களாகவும் மாறுவார்கள் என்கிறது வரலாறு!

# இஸ்லாமிய வளர்ச்சி பற்றிய ஆய்வுகளும் அதிர்வலைகளும்

சமீபத்தில் பியூ ஆய்வு மையம் (www.pewresearch.org) வெளிப் படுத்தும் தகவல்கள்:

● 2015 - 2060 இடைப்பட்ட கால அளவில் உலக அளவில் இஸ்லாமியர்களின் எண்ணிக்கை வளர்ச்சி விகிதம் இருமடங்காகி விடும். உலக கிருஸ்துவர் எண்ணிக்கையை அது முந்தி விடும்.

● வரக்கூடிய ஆண்டுகளில் உலக மக்கள் தொகை 32% உயரும்போது இஸ்லாமியர் எண்ணிக்கை 70% அதிகரிக்கும். - அதாவது 2015 இல் 1.8 பில்லியன் ஆக உள்ள இஸ்லாமியர் எண்ணிக்கை 2060-இல் சுமார் 3 பில்லியனாக உயரும். 2015-இல் இஸ்லாமியர் மொத்த உலக மக்கள் தொகையில் 24.1% இருந்தார்கள். 45 ஆண்டுகளுக்குப்பின் அது 31.1% ஆக உயரும்.




### வளர்ச்சிக்கான காரணங்களாக சொல்லப்படுபவை:

உலகில் இன்றைய இஸ்லாமியர்களின் பிறப்பு விகிதம் 2.9. இஸ்லாம் அல்லாத ஏனையவர்களின் பிறப்பு விகிதம் 2.2 ஆக உள்ளது இதில் கிறிஸ்தவர்களின் பிறப்பு விகிதம் மட்டும் தற்போது 2.6 ஆக உள்ளது. இஸ்லாமியர் அதிகமாக வாழும் நாடுகளில் இஸ்லாமியர்களின் கருவுருந்தன்மை (fertility) மற்றவர்களை விட அதிகமாக உள்ளது. இஸ்லாமியர்களின் சராசரி வயது (median age) 2015 இல் 24 ஆக இருக்கையில் மற்றவர்களின் சராசரி வயது 32 ஆக உள்ளது.

### ஐரோப்பிய நாடுகளின் நிலை

● ஐரோப்பாவின் சில பகுதிகளில் இஸ்லாமியர் மக்கள் தொகை 2050 இல் மூன்று மடங்காகும்.

● புலம் பெயர்தலும் உயர்ந்த பிறப்பு விகிதமும் இஸ்லாமியர் மக்கள்தொகை உயர்வுக்கு (சொல்லப்படும்) காரணங்கள்.

● இங்கிலாந்தில் மக்கள்தொகையில் 2016-இல் 6.3% ஆக உள்ள இஸ்லாமியர் எண்ணிக்கை 2050-இல் 17.2% ஆக உயரலாம்.

(தகவல்: http://www.pewresearch.org/fact-tank/2017/04/06)

---

### பலவிதமான பரப்புரைகள்

சமீபத்தில் வெளியான இந்தத் தகவல்கள் பல்வேறு அதிர்வலைகளை உலகில் ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக ஆதிக்க சக்திகள் அரண்டு போயுள்ளன. அன்று காலனி ஆதிக்கம் மூலம் நாடுகளைக் கொள்ளையடித்தவர்கள் இன்றும் அந்நாடுகளில் கைக்கூலி

அரசர்களையும் ஆட்சியாளர்களையும் நியமித்து அவர்கள் மூலம் அக்கிரமமாக அடக்குமுறைகளை முடுக்கிவிட்டு இன்றும் அவற்றை கொள்ளையடித்து வருகிறார்கள் என்பதே உண்மை.

இஸ்லாம் என்பது அநீதிக்கும் அக்கிரமத்திற்கும் சுரண்டலுக்கும் எதிரானது. மக்களை சுயமரியாதையோடு வாழத்தூண்டும் ஒரு மக்கள் இயக்கம் என்பதை ஆதிக்க சக்திகள் நன்றாகவே உணர்ந்துள்ளார்கள். இஸ்லாத்தின் வளர்ச்சி மூலம் மக்கள் எழுச்சி பெற்றுவிட்டால் மக்கள் தங்களின் கைப்பாவை அரசர்கள் அல்லது ஆட்சியாளர்களுக்கு - குறிப்பாக எண்ணெய் வளம் நிறைந்த அரபு நாடுகளில் - எதிராகத் திரும்பினால் தாங்கள் நடத்திவரும் கொள்ளைகள் நின்று போகும் என்று பயப்படுகிறார்கள். எனவே பலவிதமான பரப்புரைகளை தங்கள் ஆதிக்கத்திற்குட்பட்ட ஊடகங்கள் மூலமும் சமூக வலைத்தளங்கள் மூலமாகவும் முடுக்கி விட்டுள்ளார்கள்.

- இஸ்லாம் வளர்ந்து விட்டால் பயங்கரவாதமும் அதிகரிக்கும்- அப்பாவிகள் கொலைகள் அதிகரிக்கும்.
- இஸ்லாமியர்கள் ஆதிக்கம் பெற்றுவிட்டால் உலக வளங்கள் இஸ்லாமியர் கைகளுக்கு சென்றுவிடும். அவை அழிவுக்காகவே பயன்படுத்தப்படும்.
- இஸ்லாமிய ஆதிக்கம் வளரவளர பொழுது போக்குகளும் போதைப்பொருட்களும் விபச்சார விடுதிகளும் தடைசெய்யப்படும். பெண்களுக்கு ஆடைக்கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் என்பன போன்ற பல பரப்புரைகளும் உலா வருகின்றன.

## நாம் கவனிக்கவேண்டிய உண்மைகள்

மேலோட்டமாக காணும்போது இந்தப் பரப்புரைகள் உண்மையோ என்று பொதுமக்கள் எண்ணிவிட வாய்ப்புண்டு. கீழ்கண்டவற்றைக் கருத்திற்க் கொள்ளும்போதுதான் உண்மை விளங்கும்:

- இஸ்லாத்தின் வளர்ச்சி என்பது ஒரு இனம் சார்ந்த, இடம் சார்ந்த, நிறம் சார்ந்த, மொழி சார்ந்த மக்களின் எண்ணிக்கை அதிகரிப்பு அல்ல. மாறாக, அது ஒரு கொள்கை - ஒழுக்கம் பேணும் வாழ்வியல் கொள்கையை - ஏற்று வாழும் மக்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது என்பதே பொருள்.
- இஸ்லாத்தின் வளர்ச்சி என்பது இன்னொரு இனத்தை அல்லது கூட்டத்தை அழித்து உருவாவது அல்ல. மாறாக இஸ்லாமியர் அல்லாத மக்கள் இந்தக் கொள்கையை ஏற்பதனால் உருவாகும் மாற்றமே.
- மேற்படி தகவல்களில் பிறப்பு மற்றும் புலம்பெயர்தல் மூலம் உண்டாகக்கூடிய பெருக்கம் பற்றி மட்டுமே கூறப்பட்டுள்ளது. தொடர்ந்து உலகளாவ இஸ்லாத்தை விரும்பி ஏற்போரின் எண்ணிக்கை பற்றி குறிப்பிடப்படவில்லை என்பதை நாம் கவனிக்கவேண்டும்.

## இயற்க்கை மார்க்கம்

- இஸ்லாமியர்களின் பிறப்பு விகிதம் என்பது இயற்கையான ஒன்று. எந்தவித அதிகப்படியான முயற்சியும் அவர்கள் மேற்கொள்வதில்லை.

பருவ வயதடைந்தவர்களுக்குத் திருமணம், குடும்ப உறவுகள், குழந்தைப் பிறப்பு என்பவை இயற்கையான முறையில் பேணப்படுகின்றன. புண்ணியம் வாய்ந்ததாகவும் கருதப்படுகின்றன. இஸ்லாமியர் அல்லாதவர்களிடம் அதேபோன்று அவை பேணப்படாததால் பிறப்புவிகிதம் குறைந்திருக்கிறது. ஒப்பீடு அடிப்படையிலேயே இஸ்லாமியர்களின் பிறப்பு விகிதம் உயர்ந்துள்ளதாகக் காட்டப்பட்டுள்ளது.

● இங்கு குறிப்பிடப்படும் புலம்பெயர்தல் (emigration) எவ்வாறு உண்டானது என்பதும் கவனிக்கவேண்டிய விடயமே. முற்காலத்தில் எண்ணைவள நாடுகளின் வளங்களைக் கொள்ளையடிப்பதற்காக இந்த ஐரோப்பிய நாடுகள் அவற்றைக் காலனி ஆதிக்கத்திற்குக் கீழ்கொண்டுவந்து ஆண்டதன் மூலம் உண்டானவையே.

● ஐரோப்பியர்களிடையே குடும்ப அமைப்பு சீர்குலைவுகள், திருமணம் செய்யாமலே பாலுறவு, குழந்தைப் பிறப்பில் ஆர்வமின்மை, கருக்கொலைகள், சிசுக்கொலைகள் அதிகரிப்பு போன்ற காரணங்களால் பிறப்பு விகிதம் பெரும் வீழ்ச்சி கண்டுள்ளது. அதனால் தொழிலாளர் பற்றாக்குறை நலிந்த நாடுகளிலிருந்து இறக்குமதி மூலமே நடைபெறுகிறது என்பதையும் நாம் கவனிக்கவேண்டும்.

# திருக்குர்ஆன் பற்றிய நபிமொழிகள்

**ஏற்போரும் மறுப்போரும்:**

● நிச்சயமாக இந்தக் குர்ஆன் பரிந்துரை செய்யக்கூடியதாகும். அது ஏற்கப்படக்கூடியதுமாகும். அதனைப் பின்பற்றினால் அவரை அது சுவனத்தில் சேர்க்கும். அதனை பின்பற்றாமல் விட்டு விட்டால் அல்லது நிராகரித்தால் அவன் நரகின் அடித்தளத்தில் தள்ளப்படுவான்.

(அறிவிப்பாளர்: இப்னு மஸ்வூத்(ரலி) - ஆதாரம் : முஸ்லிம்)

**கற்றலும் கற்பித்தலும்**

● குர்ஆனைத் தானும் கற்று பிறருக்கும் கற்றுக் கொடுப்பவரே உங்களில் சிறந்தவர். (அறிவிப்பாளர்: உஸ்மான்(ரலி) - ஆதாரம் : புகாரி)

**இறைவனோடு இணைக்கும் பிடிமானம்**

● இக்குர்ஆனின் ஒரு முனை இறைவனின் கையிலும் மறுமுனை உங்கள் கைளிலும் உள்ளது. எனவே இதனை உறுதியாகப் பிடித்துக் கொள்ளுங்கள் நீங்கள் இம்மையில் வழிதவறமாட்டீர்கள், மறுமையில் அழிவுறவும் மாட்டீர்கள். (அறிவிப்பாளர்: அபூஹுரைரா(ரலி) - ஆதாரம் : தப்ரானி )

**‘பித்அத்’ எனும் வழிகேடு**

● வார்த்தைகளில் மிகச் சிறந்தது அல்லாஹ்வின் வேதமாகும். வழிகாட்டுதல்களில் மிகச்சிறந்தது முஹம்மது(ஸல்) அவர்களின் பாதையாகும். மார்க்கத்தில் தீமையானது மார்க்கத்தில் புதிதாகப் புகுத்தப்பட்ட நவீன அனுஷ்டானங்கள் ஆகும். (இதற்கு இஸ்லாமிய வழக்கில் ‘பித்அத்’ என்று சொல்லப்படும்.) ஒவ்வொரு பித்அத்தும் வழிகேடாகும். (ஆதாரம் : முஸ்லிம்)

# இஸ்லாமிய வளர்ச்சி மகிழ்ச்சிக்குரிய விஷயமா?

ஆம், நிச்சயமாக மகிழ்வுக்குரிய விடயமே. எப்போது?

வெறும் சில அரபு மொழிப் பெயர்களைக் கொண்டவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பினாலோ அல்லது ஒரு குறிப்பிட்ட பாணியில் உடை உடுத்துபவர்களின் அல்லது பர்தா போன்ற ஆடை அணிபவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பிலோ அல்லது தொப்பியும் தாடியும் வைத்துக் கொள்பவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதாலோ எந்தவித மாற்றமும் சமூகத்தில் நிகழப் போவது இல்லை. உண்மையாக இஸ்லாம் என்ற கொள்கையைப் புரிந்துகொண்டு அதன்படி வாழும் மக்கள் உருவானால் மட்டுமே இஸ்லாத்தின் வளர்ச்சி மகிழ்ச்சியைக் கொண்டு வரும்.

இஸ்லாம் என்ற வார்த்தையின் பொருள் அமைதி என்பதாகும். அதன் இன்னொரு பொருள் கீழ்படிதல் என்பதாகும். அதாவது இறைவனின் கட்டளைகளுக்கு உட்பட்டு நல்லொழுக்கத்தோடு வாழும் போது தனி நபர் வாழ்விலும் குடும்ப வாழ்விலும் சமூகத்திலும் அமைதிக்குப் பெயரே இஸ்லாம். அதிகமதிகம் மக்கள் இக்கொள்கையை ஏற்று வாழும்போது உலகில் பல மாற்றங்களும் புரட்சிகளும் ஏற்படும் என்பதில் ஐயமில்லையல்லவா? அவை உலக மக்கள் அனைவரையும் மகிழ்ச்சியூட்டுபவையாக இருக்கும். உதாரணமாக ஒரு சிலவற்றை மட்டும் காண்போம்.

### இஸ்லாம் உலகில் உண்மையாக மலரும்போது...

● மனித இதயங்களில் இறைவனைப் பற்றியும் மறுமை வாழ்வு பற்றியும் முறையான நம்பிக்கை விதைக்கப் படுவதால் பாவங்கள் விலகும். மனிதனை சுயக்கட்டுப்பாடு மிக்கவனாக கடமை உணர்வு மிக்கவனாக அது வார்த்தெடுக்கும். அநீதியும் அக்கிரமங்களும் மோசடிகளும் அழிந்து அங்கே தர்மங்களும், நல்லறங்களும் நீதியும் நேர்மையும் பரஸ்பரம் விட்டுக்கொடுக்கும் பண்பும் நாட்டுவளங்களை நெறியோடு பங்கிட்டுக் கொள்ளும் மனப்பாங்கும் மக்களிடையே வளர்ந்து வரும்.



● மனித உள்ளங்களில் உண்மையான இறை உணர்வும் பக்தியும் மறுமை உணர்வும் விதைக்கப் படுவதாலும் இறைவனோடு நேரடித் தொடர்பு ஏற்படுவதாலும் தனி நபர் வாழ்வில் தன்னம்பிக்கை, சுயமரியாதை உணர்வு, வீரம், பாவங்களில் இருந்து விலகியிருத்தல், தியாகமனப்பான்மை, பொறுமை, பிற உயிர்களிடம் அன்பு, பணிவு போன்ற நற்பண்புகள் மக்களின் வாழ்வில் தழைக்கும்.

● பொய்க் கடவுளர்களும் போலி தெய்வங்களும் இடைத்தரகர்களும் ஒழிவதால் கடவுளின் பெயரால் சுரண்டப்படுதலும் கொள்ளைகளும் மூடநம்பிக்கைகளும் மூடப்பழக்கவழக்கங்களும் வீண்சடங்குகளும் ஒழியும். பொருட்செலவின்றி நேரடியாக இறைவனை வழிபடுவார்கள். இந்த நிமிடம் வரையும் அயராமல் நடைபெறும் பகல் கொள்ளைகள்

முடிவுக்கு வரும். தொடர்ந்து நாட்டில் செல்வ வளம் செழித்தோங்கும், ஆக்கபூர்வமான வழிகளில் நாட்டின் செல்வம் செலவிடப்படும்.

● ஒன்றே குலம் ஒருவனே இறைவன் என்ற கொள்கை மேலோங்க ஜாதிகளும் தீண்டாமையும் ஏற்றதாழ்வுகளும் இனவெறியும் நிறவெறியும் ஒழியும். இனத்துக்கு ஒரு நீதி, நாட்டுக்கு ஒரு நீதி மாநிலத்துக்கு ஒரு நீதி என்னும் நிலைமாறி அனைத்து மக்களுக்கும் ஒரே நீதி என்பது நடைமுறைக்கு வரும். மனித சமத்துவமும் சகோதரத்துவமும் சுயமரியாதையும் பரஸ்பர அன்பும் மலரும்.

● சுரண்டலுக்கும் பதுக்கலுக்கும் இலஞ்சம் ஊழல் போன்றவற்றுக்கும் வாய்ப்பு அளிக்காத பொருளாதார திட்டங்கள் நடைமுறைக்கு வரும். நாட்டின் செல்வம் செல்வந்தர்களுக்கு இடையில் மட்டுமல்லாமல் அனைவரிடையேயும் புழங்கும் வண்ணம் பொருளாதாரம் சீரமைக்கப்படும்.

● செல்வந்தர்களிடம் நீதமான முறையில் ஜகாத்(ஏழைவரி) தவறாமல் வசூலிக்கப்படும். அது ஏழைகளைத் தேடிக் கண்டறிந்து அவர்களுக்கே விநியோகம் செய்யப்படும். இன்று நாட்டில் நிலவிலுள்ள 40% வருமான வரி விதிப்பின் விளைவாக உண்டாகும் கருப்புப்பணம், சுவிஸ் வங்கிகளில் பதுக்குதல் போன்றவை ஒழிந்து உள்நாட்டிலேயே அந்த பணம் புழங்க வழிவகை உண்டாகும். (செல்வந்தர்கள் இறைப் பொருத்ததிற்காக தானாகவே முன்வந்து ஜகாத்தை வழங்குவார்கள் என்பது வேறு விஷயம்)

● வட்டியில்லா பொருளாதாரம் நடைமுறைக்கு வரும். வெற்றுப்பணம் குட்டிபோடுவதும் வங்கிகள் வெற்றுக்காகிதங்களை புழக்கத்தில் விட்டு லாபம் சம்பாதிப்பதும் நிற்கும். அதனால் பணத்துக்கு உண்மையான மதிப்பு உண்டாகி, பணவீக்கம், ஊக வாணிபம், மோசடிகள் ஒழிக்கப்படும். பணக்காரர்களை மேலும் பெரிய பணமுதலைகளாகவும் ஏழைகளை பரம ஏழைகளாகவும் மாற்றும் இன்றைய பொருளாதார அமைப்பு மாறி முனைவோர் அனைவருக்கும் தக்க வாய்ப்பளிக்கும் திட்டங்கள் அமுலுக்கு வரும்.

● பகுத்தறியும் பண்பு தூண்டப்படுவதால் அங்கு அறியாமை அகன்று மனிதகுலத்துக்கு பயனுள்ள கல்வியும் அறிவியலும் வளரும். இறையச்சத்துடன் இணைந்து கற்கப்படும் கல்வியும் அறிவியலும் மனித இனத்தை அழிக்கவோ அதன்மேல் ஆதிக்கம் செலுத்தவோ பயன்படுத்தப்பட மாட்டாது. மாறாக ஆக்கபூர்வமான வழிகளில் பயன்படுத்தப்படும். இறைவனின் வல்லமையையும் மறுமையின் உள்ளமையையும் உணரவும் இறையச்சத்தை வளர்க்கவும் பயன்படும்.

● பகைமைகளும் மோசடிகளும் அகன்று போவதால் பாதுகாப்பும் அமைதியும் சூழ ஒரு புத்துலகு பூத்து வரும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கோட்பாடு உண்மையாகப் பின்பற்றப்படும். நாடுகளைப் பிரித்து நிற்கும் எல்லைகள் மறையும், நாடுகளின் மூன்றில் ஒரு பங்கு பொருளாதாரத்தை விழுங்கி நிற்கும் இராணுவங்கள் மறையும்.

● இறை நேசத்துக்காகவும் மறுமை இன்பங்களுக்காகவும் வேண்டி எதையும் தியாகம் செய்யும் தன்னலமில்லாத சான்றோர்களால் அவ்வுலகு நிறைந்திருக்கும்!

# ஐரோப்பிய நாடுகளில் இஸ்லாமிய வளர்ச்சி

காலனி ஆதிக்கம் மூலம் நலிந்த நாடுகளை இராணுவ வல்லமை மூலம் கைப்பற்றி அந்நாட்டு வளங்களைக் கொள்ளையடித்துக் கொண்டிருந்த நாடுகளில் முக்கியமானவை இங்கிலாந்தும் பிரான்சும் என்பதை அறிவோம். அவர்கள் கைப்பற்றிய நாடுகளில் இயற்க்கை வளங்களை - குறிப்பாக அரபு நாடுகளில் எண்ணெய் வளங்களை - தங்கள் ஆதிக்கத்திற்குக் கீழ் கொண்டு வந்தார்கள். ஆப்பிரிக்க நாட்டு கறுப்பின மக்களை அடிமைகளாகப் பிடித்தார்கள். தங்கள் நாடுகளில் தொழில் வளர்ச்சிக்காகவும் இன்ன பிற தேவைகளுக்காகவும் இவற்றை பயன்படுத்தினார்கள். இவ்வாறு கைப்பற்றிய அடிமை நாட்டு மக்கள் இந்த ஐரோப்பிய நாடுகளில் குடியேறுவதும் அதைத் தொடர்ந்த இஸ்லாத்தின் பரவலும் தவிர்க்கமுடியாத ஒன்றாகிவிட்டது.

சூரியன் மறையாத சாம்ராஜ்ஜியத்தை உருவாக்கி வைத்திருந்த பிரிட்டனின் நிலை பற்றி நடத்தப்பட்ட சமீபத்திய ஆய்வுகள் வெளிப்படுத்தும் தகவல்கள்:

- உலகின் மிகப்பெரிய மதமாக கிறிஸ்தவம் இருந்தாலும் ஐரோப்பாவில் அது வேகமாக வீழ்ச்சியுறும் நிலையில் உள்ளது. ஐரோப்பாவில் கிருஸ்தவ மக்களின் பிறப்பு விகிதத்தை விட இறப்பு விகிதம் அதிகரித்த நிலையில் உள்ளது. (http://www.pewresearch.org/fact-tank/2017/04/05/christians-remain-worlds-largest-religious-group-but-they-are-declining-in-europe/)

- பிரிட்டனில் வாழும் கிறித்தவர்களுக்கு தங்கள் மதத்தின் மீது நம்பிக்கை குறைந்து வருவதால் பலர் கடவுள் மறுப்பு கொள்கையை தேர்வு செய்வதாகவும் பக்தர்களின் வருகைக் குறைவு காரணமாக கிறித்த தேவாலயங்கள் வெறிச்சோடிப்போய் உள்ளதாகவும் அவற்றில் சில மதுபான பார்களாக மாற்றப்பட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இங்கு ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பக் கூடியதாக இன்று இஸ்லாம் வளர்ந்துள்ளது. குறிப்பாக செப்டம்பர் 11 அமெரிக்க இரட்டை கோபுர இடிப்புக்குப் பின்னர் இஸ்லாம் பற்றியும் குர்ஆன் பற்றியும் அறியும் ஆவல் ஆங்கில மக்களிடையே பேரலையாக எழுந்தது. பலரை அந்த அலை இஸ்லாத்தின்பால் இழுத்து வந்துள்ளது.

- கிறித்தவ மதத்திலிருந்து இஸ்லாத்தை தழுவக்கூடியவர்கள் கிறித்தவ தேவாலயங்களை வாடகைக்கு எடுத்து பள்ளிவாசல்களாகவும் நடத்தி வருகிறார்கள்.

- ஒவ்வொரு ஆண்டிலும் 5 இலட்சம் நம்பிக்கையாளர்களை கிறிஸ்தவ மதம் இழந்து வருகிறது.

- கிறிஸ்தவ மதத்தவரின் எண்ணிக்கை குறைந்து வரும் அதேவேளையில் முஸ்லிம்களின் எண்ணிக்கை கடந்த ஆறு ஆண்டுகளில் 39 சத வீதம் உயர்ந்து 30 இலட்சத்தை எட்டியுள்ளது.

● கடந்த ஆண்டுகளில் மட்டும் லட்சக்கணக்கான மக்கள் இஸ்லாத்தில் இணைந்துள்ளனர். தொடர்ந்து இணைந்து வருகின்றனர். ஆண்டு தோறும் சுமார் 5200 பிரிட்டானியர்கள் இஸ்லாத்தை ஏற்பதாக 2013 வருட தகவல் கூறுகிறது. பிரிட்டனில் பிறக்கும் ஆண் குழந்தைகளுக்கு சூட்டப்படும் பெயர்களில் மிகப் பிரபலமான பெயர் முஹம்மத் என்ற பெயராகும் என்கிறது ஒரு ஆய்வு (http://www.independent.co.uk/news/uk/home-news/muhammad-boys-names-uk-list-william-replaced )

ஐரோப்பா கண்டத்தில் பிரான்ஸில்தான் முஸ்லிம்கள் அதிகம் இருப்பதாக சொல்லப்படுகின்றது. ஆனால் தற்போது பிரான்ஸைக் காட்டிலும் இஸ்லாமிய வளர்ச்சி விகிதம் பிரிட்டனில்தான் அதிகமாக உள்ளதாக பல்வேறு ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்தக் கணக்கெடுப்பில் ஈடுபட்ட ஆய்வாளர்கள், மசூதிகளில் சென்று எத்தனை முஸ்லிம்கள் இஸ்லாத்தை ஏற்றார்கள் என்று கணக்கெடுத்துள்ளனர். அதில் தலை நகர் லண்டனில் மட்டும் 1400 முஸ்லிம்கள் கடந்த ஓராண்டில் பள்ளிவாசல்களில் இஸ்லாத்தை ஏற்றுள்ளனர். (அமைப்புகள் மூலமாகவும், தனி நபர் மூலமாகவும் இஸ்லாத்தை ஏற்றவர்கள் தனி).

### இஸ்லாத்தை ஏற்கக் காரணம் என்ன?

ஏன் முஸ்லிம்களாக மாறினார்கள் என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கையில், இஸ்லாத்தைப் பற்றி ஊடகங்கள் தொடர்ந்து பொய்ப்பிரசாரம் செய்து வருகின்றன. இந்த பொய்ப் பிரசாரத்தை பார்ப்பவர்கள், படிப்பவர்கள் இஸ்லாத்தை அறிய ஆர்வமடைகின்றனர், இறுதியில் அவர்கள் ஈர்க்கப்பட்டு இஸ்லாத்தை தங்களுடைய வாழ்க்கை நெறியாக ஏற்றுக் கொள்வதாக தகவல்கள் தெரிவிக்கிறது. இதே நிலை நீடித்தால் 2030 ல் பிரிட்டன் கிறித்தவ நாடாக இருக்காது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

(தொடரும் இன்ஷாஅல்லாஹ்)




# போலீஸ் சீருடையின் அங்கமாகும் ஹிஜாப்!

ஸ்காட்லாந்து போலீஸ் துறையில் பணியாற்றும் இஸ்லாமியப் பெண் போலீஸ் அதிகாரிகளுக்கு அவர்களின் சீருடையின் பாகமாக ஹிஜாப் (தலையை மறைக்கும் முக்காடு) போடுவது அதிகாரபூர்வமாக அனுமதிக்கப்பட்டுள்ளது. இஸ்லாமிய பெண்கள் அதிகமாக போலீஸ் படையில் இணைவதை ஊக்குவிக்கும் முகமாக இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று BBC செய்தி அறிவித்துள்ளது. இதற்கு முன்னதாக லண்டன் மெட்ரோ போலீஸ் பத்து வருடங்கள் முன்பாகவே இந்த அனுமதியை வழங்கியுள்ளது.

"இறைவனுக்கு சமமாக அவன் அல்லாதவர்களை அழைத்து பிரார்த்திப்பவர்கள், மண்ணறையில் கடினமான சோதனையை சந்திப்பார்கள். மண்ணறையில் இறந்தவர்களை அடக்குவதை நீங்கள் நிறுத்திவிடுவீர்கள் என்று நான் பயப்படாமலிருந்தால் நிச்சயமாக நான் உங்களுக்கு மண்ணறையில் நடக்கும் வேதனையை கேட்கச் செய்திருப்பேன்" - நபிமொழி



# அறிவிப்பு

தவிர்க்க முடியாத காரணங்களால் வரும் 2018 ஏப்ரல் மாதத்தில் இருந்து திருக்குர்ஆன் நற்செய்தி மலர் தனி இதழ் விலை 10 ரூபாயாக உயர்த்தப்படுகிறது. வாசகர்களின் தொடர்ந்த ஒத்துழைப்பை நாடுகிறோம். ஏற்கனவே சந்தா செலுத்தியவர்களின் தொகை உரியமுறையில் அட்ஜஸ்ட் செய்யப்படும். இன்ஷாஅல்லாஹ்.

- நிர்வாகம் - **Ph.** 09742899305

**திருக்குர்ஆன் தமிழாக்கம் அன்பளிப்புப் பிரதி பெற விரும்பும் மாற்றுமத அன்பர்கள் கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளவும்:**

சென்னை: 9941227866, 9894442844, 8122264467(மயிலாப்பூர்), 9840572018 (நுங்கம்பாக்கம்), 9840527687 (பல்லாவரம்), 9087836393(தாம்பரம்), ஓசூர்:9994713191 கிருஷ்ணகிரி: 9952862321 தர்மபுரி:9842627171 கோவை: 9600800050 திருப்பூர்:9150068919 குன்னூர்:9843622246 ஊட்டி:9543963412 ஈரோடு:7373947869, 9942958888 உடுமலை:9865051914 சேலம்:9994091364 திருச்சி:9865446344, 9442709087 மதுரை:9789341714 கும்பகோணம்:9597285160 விழுப்புரம்:9790290002 திருநெல்வேலி:9786230030 தென்காசி :9443695979 வேலூர்:9944656942 மயிலாடுதுறை:9942941190 திருவண்ணாமலை:9994564650, 9944905212 தூத்துக்குடி:8148059038 இளையான்குடி: 9842081210 ராஜபாளையம்:7845033616 ராமநாதபுரம்:7418140634 பாம்பன்:9043758656 கே.ஜி.எ.்.ப்:9845217262

Printed, published &edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, No.501, 3rd cross, Syed Block, AS palya, Bangalore 560017 and printed at Print-O- Graph, Balaji complex, Sultanpet, Bangalore.
Registered News paper in India No. KARTAM/2007/28173

From
**House of Peace**
PO Box No. 1726
Bangalore 560 017

Registered news paper in India No. KARTAM/2007/28173
Registered under Postal Regn. No. KRNA/BGE/1057/2018-2020
Posted at BANGALORE PSO, Mysore Road , Bangalore 560026 on 25th or 26th or 27th of every month. No. of Pages: 24+4
Licenced to post without prepayment . License No. WPP-308
Date of Publication: 25th of every month

To **(PRINTED MATTER)**

.........................................................................

.........................................................................

.........................................................................

.........................................................................

# உங்களை நேசிக்க வந்த ஜீவன் அது!



*“வறுமைக்கு அஞ்சி உங்கள் குழந்தைகளைக் கொல்லாதீர்கள்! அவர்களுக்கும் உங்களுக்கும் நாமே உணவளிக்கிறோம். அவர்களைக் கொல்வது பெரிய குற்றமாகும்”;* (திருக்குர்ஆன் 17:31)

‘உன் குழந்தை உன்னுடன் உண்ணும் என அஞ்சி அதனை நீ கொல்வது பெரும்பாவங்களில் ஒன்று” – நபிமொழி
(புகாரி, முஸ்லிம்)